முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.39 /2018

நாள். 08.04.2025 வா.சா.1 – கணேசன்

த/பெ - சுயம்பு நாடார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. உங்களின் பிராது மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் உங்கள் தகப்பனார் சுயம்பு நாடார் அவரது சகோதரர் பண்டார நாடார் மற்றும் பகவதி நாடார் ஆகியோர்கள் சேர்ந்து பெரியோர்கள் முன்னிலையில் வாக்கால் பாகம் செய்து கொண்டார் என்றால் சரிதான். அவ்வாறு வாக்கால் பாகம் செய்து கொண்ட சொத்தை அவர்அவர்களுக்கு கிடைத்த பாகத்தை தனித்தனியாக அனுபவம் செய்வதாக கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். அவ்வாறு வாக்கால் பாகம் செய்து கொண்ட பாகத்தை பண்டார நாடார் மற்றும் பகவதி நாடார் ஆகியோர்களுக்கு கிடைத்த சொத்தை அவர்கள் பிரதிவாதி குழந்தைவேலுக்கு வா.சா.ஆ.3 கிரைய பத்திரம் மூலம் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

2. மேற்படி விவரங்கள் வா.சா.ஆ.3 கிரையம் பத்தில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 கிரையப் பத்திரத்தை படித்துப் பார்த்துள்ளீர்களா என்றால் ஞாபகமில்லை. எனக்கு படிக்க தெரியாது. வா.சா.ஆ.3 கிரையப் பத்திரத்தில் 2 அயிட்ட சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1வது அயிட்டமாக

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2025.04.08 14:55:24 +0530

சர்வே எண்.496 ல் 6 ஏக்கர் 36 செண்ட் மேற்கடைய எங்கள் பாகம் ஏக்கர் 2.37 ல் தெற்கடைய கிழமேலாக செண்ட் 50 என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 50 செண்டிற்கும் 4 பக்க எல்கைகள் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. 2 வது அயிட்டமாக சர்வே எண். 496 ல் ஏக்கல் 2. 37 ல் வடக்கடைய ரோட்டுக்கு தென்புறமாகவும், வடபுறமாகவும் இருக்கும் ஏக்கர் 1.87 ல் பிரிவின்றி பங்கு 3 ல் எங்கள் சகோதரர் சுயம்பு பாகம் செண்ட் 62 1/3 நீக்கி, எங்கள் பாகம் 1 ஏக்கர் செண்ட் 24 2/3 என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 ஏக்கர் 87 செண்டிற்கு 4 பக்க எல்கைகள் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். 2 ஏக்கர் 37 செண்டடில் உள்ள கிணற்றிலும் பாதை, தண்ணீர் காலிலும் 2/3 பங்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அதனால் 1 ஏக்கர் 87 செண்ட் நிலம் பத்திரப்படி ரோட்டுக்கு தெற்கேயும், வடக்கேயும் உள்ளது என்றால் சரிதான்.

4. உங்கள் தகப்பனார் சுயம்பு நாடார் அவருக்கு பாத்தியப்பட்ட செண்ட் 62 1/3 ல் 27 செண்ட் நிலத்தை பிரதிவாதி குழந்தைவேலுக்கு 25.02.1992 ல் வா.சா.ஆ.4 மூலம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த கிரையம் பத்திரம் ஏற்படுத்த உங்கள் தகப்பனார் தான் தகவல் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திரத்தில் பிரதிவாதி கிரையம் பெற்ற 27 செண்ட் நிலத்திற்கு 4 பக்க எல்கை கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திலும் சர்வே எண்.496 ல் எக்கர் 6 செண்ட் 36 ல் வடபுறமும், தென்புறமும் 1 ஏக்கர் 87 ல் வடக்கேயிருந்து ரோட்டிற்கு தென்புறம் 3 வது பாகம் எனக் காட்டுப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.04.08 14:55:30 +0530

5. அந்த கிரையப்பத்திரத்தில் உங்கள் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட கிணற்றில் 1 /3 பாகத்தை பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் 27 செண்ட்டிற்கு கிரையம் கொடுத்துள்ளார். அந்த கிரையப் பத்திரத்தில் வடக்கும், தெற்கும் வாங்குபவர் நிலம் என்றும், கிழக்கு பாதை என்றும், மேற்கு மணிநாடார் நிலம் எனக்காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் உங்கள் தகப்பனாருக்கு ரோட்டிற்கு தெற்கு பக்கம் கையிருப்பு நிலம் இருப்பதாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி குழந்தை வேல் கிரையம் பெற்ற இடத்தை அவரது பெயருக்கு தனிப்பட்டா பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.327 பிரதிவாதி குழந்தை வேல் பெயருக்கு ஏற்பட்டது என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.1** ஆகும்.

6. பி.வா.சா.ஆ.1 பட்டாவனது 496/7 என்று உட்பிரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்தப் பட்டா 1992 ம் ஆண்டிலேயே வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி 1992 ம் ஆண்டிலிருந்து அவர் பெயரிலேயே மின் இணைப்பு பெற்று தனியாக விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். உங்கள் தகப்பனாருக்கு பட்டா எண்.1688 ன் படி ரோட்டிற்கு வடபுறம் சர்வே எண்.496/1 என வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து உங்கள் பாட்டி பொன்னைம்மை நாடாத்தி மூலம் பெறப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.496/1 பொறுத்து உங்கள் சகோதரிகள் பொன்னு, சிவகாமி மற்றும் சகோதரர் காந்தி மற்றும் உங்களுக்கு என 22.09.2015 ல் தனித்தனியாக செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.04.08 14:55:37 +0530

7. தற்போது சாட்சியிடம் காட்டப்படும் ஆவணமானது உங்கள் தகப்பனார் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான் அதன் ஆவண எண்.2752/2015 என்றால் சரிதான். அதன் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2** ஆகும். தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்படும் அவணமானது உங்கள் சகோதரி பொன்னு என்பவருக்கு உங்கள் தகப்பனாரால் எழுதி கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். அதன் அவணம் எண்.2753/2015 என்றால் சரிதான். அதன் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3** ஆகும். தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்படும் அவணமானது உங்கள் சகோதரர் காந்தி என்பவருக்கு உங்கள் தகப்பனாரால் எழுதி கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். அதன் அவணம் எண்.2754/2015 என்றால் சரிதான். அதன் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.4** ஆகும். தற்போது சாட்சியிடம் காண்பிக்கப்படும் அவணமானது உங்கள் சகோதரி சிவகாமி என்பவருக்கு உங்கள் தகப்பனாரால் எழுதி கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். அதன் அவணம் எண்.2755/2015 என்றால் சரிதான். அதன் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.5** ஆகும்.

8. மேற்படி பிவா.சா.ஆ.2 முதல் 5 பத்திர்ங்களில் சொத்தானது உங்கள்தகப்பனாருக்கு பட்டா எண்.1688 படி கிடைக்கப்பெற்றுள்ளதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். எங்கள் பெயருக்கு செட்டில்மெண்ட் ஏற்பட்ட பின் பட்டா எண்.1688 ல் எங்கள் பெயருக்கு கூட்டு பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கூட்டுப்பட்டா **பி.வா.சா.ஆ.6** ஆகும். சர்வே எண்.496/1 ல் 10.50 ஏர்ஸ் க்கு சமமான 26

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2025.04.08 14:55:44 +0530

செண்ட் என்றும், அதில் எங்கள் 4 பேருக்கு தலா 6 .50 செண்ட் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

9. இந்த செட்டில்மெண்ட் ஏற்படுத்தப்பட்ட பின்பும், நீங்களும் உங்கள் சகோதரர் காந்தி என்பவரும் சமூகம் நீதிமன்றத்தில் பிரதிவாதி மீது ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளிர்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு எண் ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகமில்லை. அந்த வழக்கு விசாரணை செய்யப்பட்ட பின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் தகப்பனார் வருகை தவறுதல் காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த வழக்கு சம்மந்தமாகவும், உங்கள் தகப்பனார் உங்களுக்கும், சகோதரர், சகோதரிகளுக்கும் ஏற்படுத்திய செட்டில்மெண்ட் குறித்தும் இந்த வழக்கிலும், உங்கள் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையை படித்து பார்த்துள்ளேன்.

10. பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் உங்கள் தகப்பனாருக்கு சர்வே எண்.496/1 ல் 26 செண்ட் மட்டுமே பாத்தியப்பட்டது என்றும், அதை அவரது 4 மக்களுக்கு தனித்தனியாக செட்டில் பண்ணி கொடுத்துவிட்டார் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் உங்கள் மனைவி சரஸ்வதி, சிவகாமியின் கணவர் நாராயணன் ஆகியோர்கள் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். சர்வே எண்.496/1 ரோட்டிற்கு வடபக்கம் உள்ளது என்றும், அது மட்டும் உங்கள் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்றும்,

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.04.08 14:55:51 +0530

ரோட்டிற்கு தெற்கே உங்கள் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து ஏதும் கிடையாது என்றால் சரியல்ல.

11. வழக்கில் 2ம் தபசிலாக காட்டப்பட்ட 35.33 செண்ட் என தனியாக தபசில் கிடையாது என்றால் சரிதான். அது புல எண்.496/7 பிரதிவாதியின் இடத்துடன் சேர்ந்துள்ளதாக கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். 2ம் தபசில் சொத்தை பொறுத்து சுவாதீனம் பரிகாரம் கேட்காததால் வழக்கு நிலைக்கத்தக்கத்தல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.,2 முதல் 5 ஆவணத்தில் ஒவ்வொரு ஆவணத்திலும் மதிப்பு ரூ.2,76,0000/- என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் வழிகாட்டு மதிப்பு படி மதிப்பீடு செய்து நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றும், நீங்கள் செலுத்திய நீதிமன்ற முத்திரை கட்டணம் செலுத்தியது தவறு என்றால் சரியல்ல.

12. 2ம் தபசிலாக காட்டப்பட்ட சொத்திற்கு வழிகாட்டு மதிப்பு படி 18,00,000 (பதினெட்டு இலட்சத்திற்கு) மேல் வருகிறது என்றும், சமூகம் நீதிமன்றத்திற்கு கீழ் விசாரணை செய்ய பணவரையறை இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.496/7 ல் பிரதிவாதி தனிப்பட்டா பெற்று 1992 முதல் தனித்து அனுபவம் செய்து வருகிறார் என்றும், 25 வருடங்கள் கழித்து விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு காலவரை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அது போல் நீங்கள் பிராதை சீர்திருத்தம் செய்து சுவாதீன பரிகாரமும், காலவரை சட்டத்தால் பாதிக்ப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்தினை எப்போதும் நீங்கள்அனுபவிக்கவில்லை என்றும், உங்கள் தகப்பனாருக்கு ரோட்டிற்கு தெற்கு

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.04.08 14:55:57 +0530

பக்கம் எந்த சொத்தும் கிடையாது என்றும், 2ம் தபசில் சொத்து சம்மந்தமாக கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கத்தல்ல என்றால் சரியல்ல. உங்கள் தகப்பனாருக்க பாத்தியப்பட்ட சொத்தை உங்களுக்கும், உங்கள்சகோதரர், சகோதரிகளுக்கு செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டு அதை மறைத்து பிரதிவாதிக்க பாத்தியப்பட்ட 2 ம் தபசில் சொத்தை சட்டவிரோதமாக அபகரிக்க வேண்டி பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.04.08 14:56:03 +0530